# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 1983 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உள்ளூர் அதிகாரசபைகள் (வர்த்தக, கைத்தொழில் முயற்சிகள்) சட்டம்

---

*[1983, மார்ச்சு மாதம் 18 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1983, மார்ச்சு மாதம் 18 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : சதம் 45* *தபாற் செலவு : சதம் 50*

## 1983 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உள்ளூர் அதிகாரசபைகள் (வர்த்தக, கைத்தொழில் முயற்சிகள்) சட்டம்

[1983, மார்ச்சு மாதம் 18 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ—ஓ. 16/80
1484

**உள்ளூர் அதிகாரசபைகள் வர்த்தக, கைத்தொழில் முயற்சிகளில் ஈடுபடுவதற்கும், அத்துடன் தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடுசெய்வதற்கான ஒரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**சுருக்கப் பெயர்.**

1. இச்சட்டம், 1983 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உள்ளூர் அதிகார சபைகள் (வர்த்தக, கைத்தொழில் முயற்சிகள்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

**252 ஆம் அத்தியாயத்தின் 40 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

2. மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 40 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (ப) என்னும் பந்தியினை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது :—

" (பப) அமைச்சரின் முன்னங்கீகாரத்துடன்—

(i) மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தினதும் நகர சபைகள் கட்டளைச்சட்டத்தினதும் கீழ் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின்கீழ் ஏதேனும் மாநகரசபையால் அல்லது நகர சபையால் தாபித்துப் பேணப்படக் கூடியனவான, விடயத்திற்கேற்றுற்போல, பகிரங்க சேவைகளுக்கு அல்லது பகிரங்கப் பயன்பாட்டுச் சேவைகளுக்குத் தேவைப்படக்கூடியவையான அத்தகைய எந்திர சாதனங்களை, உபகரணங்களை, பொருள்களை, மூலப் பொருள்களையும் பண்டங்களையும் உற்பத்தி செய்வதற்கும் தயாரிப்பதற்குமான வர்த்தக, கைத்தொழில் முயற்சிகளில் ஈடுபடுதல் ; அத்துடன்

(ii) அத்தகைய எந்திரசாதனங்களை, உபகரணங்களை, பொருள்களை, மூலப்பொருள்களை அல்லது பண்டங்களை வேறு ஏதேனும் மாநகர சபைக்கு அல்லது நகர சபைக்கு அல்லது பொதுமக்களுக்கு சபையினால் தீர்மானிக்கப்பட்டு அமைச்சரினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான அத்தகைய விலைகளில் விற்றல். ".

**252 ஆம் அத்தியாயத்தில் 40அ என்னும் புதிய பிரிவினை உட்புகுத்துதல்.**

3. மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 40 ஆம் பிரிவினை உடனடுத்து பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகிறது என்பதுடன் அது அக்கட்டளைச்சட்டத்தின் 40அ என்னும் பிரிவாகப் பயனுடையதாதலும் வேண்டும் :—

" வர்த்தக, கைத்தொழில் முயற்சிகள் தொடர்பாக அமைச்சருக்குள்ள தத்துவங்கள்.

40அ. (1) அமைச்சர் 40 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (பப) என்னும் பந்தியின் கீழான ஏதேனும் வர்த்தக அல்லது கைத்தொழில் முயற்சியினை—

(அ) அத்தகைய முயற்சியின் பொருளாதார வாய்ப்பு ;

(ஆ) அத்தகைய முயற்சியின் செயற்பாட்டால் ஏதேனும் மாநகர சபைக்கும் பொதுமக்களுக்கும் கிடைக்கக்கூடியவையான நலன்கள்;

(இ) அத்தகைய முயற்சியில் ஈடுபடுகின்ற மாநகர சபையின் நிதி நிலைமை,

ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு அங்கீகரிக்கலாம்.

(2) பாராளுமன்றத்தினால் 185 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியின்கீழ் மாநகரசபை ஒன்றுக்கு ஒதுக்கிவிடப்பட்ட பணத்தொகைகள் எவையும், அத்துடன் அமைச்சரினால் 185 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (எ) என்னும் பந்தியின்கீழ் மாநகர சபை ஒன்றுக்கு குறித்தொதுக்கப்பட்ட கொடைகள் எவையும் ஏதேனும் வர்த்தக அல்லது கைத்தொழில் முயற்சியைத் தாபிக்கும் அல்லது பேணும் நோக்கங்களுக்காக அத்தகைய சபையால் பயன்படுத்தப்படுதலாகாது.

(3) அமைச்சர், ஏதேனும் மாநகரசபை ஏதேனும் வர்த்தக அல்லது கைத்தொழில் முயற்சியினைத் தொடர்ந்து நடாத்துவதானது, தவறான முகாமை காரணமாக அல்லது சபைக்கு நிதி இழப்பினை ஏற்படுத்தக்கூடும் என்ற காரணத்துக்காக அத்தகைய சபையின் நலன்களுக்குப் பங்கமேற்படுத்துவதாயமையும் எனக் கருதுமிடத்து, அவர், சபையுடன் கலந்தாலோசித்துக் கொண்டதன் பின்னர், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அத்தகைய முயற்சி செயற்படுத்தப்படுவதனை முடிவுறுத்தலாம் என்பதுடன், அத்தகைய முயற்சியின் எல்லாப் புத்தகங்களையும் பதிவேடுகளையும், இருப்புக்களையும் பொறுப்பேற்குமாறு சபையினைப் பணிப்பதோடு, அத்தகைய கட்டளைக்குப் பயன்தர அவசியமாகக்கூடியவாறான அத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் பணிக்கலாம்.

(4) அமைச்சர், காலத்திற்குக் காலம், ஏதேனும் வர்த்தக அல்லது கைத்தொழில் முயற்சியில் ஈடுபட்டுள்ள ஏதேனும் மாநகரசபைக்கு, அதன் தொழிலைக்கொண்டு நடாத்துதல் அல்லது செய்தல் தொடர்பான பொதுவான அல்லது சிறப்பான பணிப்புகளை வழங்கலாம் என்பதுடன் அத்தகைய பணிப்புகள் சபையால் கொண்டுநடாத்தப்படுதலும் வேண்டும்.

(5) அமைச்சர், காலத்திற்குக் காலம், அத்தகைய முயற்சியின் தொழில் தொடர்பான விவரத் திரட்டுகள், கணக்குகள் அத்துடன் வேறும் தகவல் என்பனவற்றை, அவர் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் கொடுத்துதவுமாறு எழுத்தில் சபையினைப் பணிக்கலாம் என்பதுடன் சபையானது அத்தகைய பணிப்பு ஒவ்வொன்றினையும் கொண்டுநடாத்துதலும் வேண்டும்.".

4. நகரசபைகள் கட்டளைச்சட்டத்தின் 36 ஆம் பிரிவு, அப்பிரிவின் (ஐ) ஆம் பந்தியினை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியினை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது :— 255 ஆம் அத்தியாயத்தின் 36 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(ஐஐ) அமைச்சரின் முன்னங்கீகாரத்துடன்—

(i) முறையே மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தினதும் நகர சபைகள் கட்டளைச்சட்டத்தினதும் கீழ் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின்கீழ் ஏதேனும் மாநகர சபையால் அல்லது நகர சபையால் தாபித்துப் பேணப்படக்கூடியனவான, விடயத்திற்கேற்றுற்போல, பகிரங்க சேவைகளுக்கு அல்லது பகிரங்கப் பயன்பாட்டுச் சேவைகளுக்குத் தேவைப்படக்கூடியவையான அத்தகைய எந்திர சாதனங்களை, உபகரணங்களை, பொருள்களை, மூலப் பொருள்களையும், பண்டங்களையும் உற்பத்தி செய்தல், தயாரித்தல் ஆகியனவற்றிற்கான வர்த்தக, கைத்தொழில் முயற்சிகளில் ஈடுபடுதல் ; அத்துடன்

(ii) அத்தகைய எந்திரசாதனங்களை, உபகரணங்களை, பொருள்களை, மூலப்பொருள்களை அல்லது பண்டங்களை வேறு ஏதேனும் நகர சபைக்கு அல்லது மாநகர சபைக்கு அல்லது பொதுமக்களுக்கு சபையினால் தீர்மானிக்கப்பட்டு அமைச்சரினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான அத்தகைய விலைகளில் விற்றல்.".

5. நகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 36 ஆம் பிரிவினை உடனடுத்து பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகிறது என்பதுடன் அது அக்கட்டளைச்சட்டத்தின் 36அ என்னும் பிரிவாகப் பயனுடையதாதலும் வேண்டும் :— 255 ஆம் அத்தியாயத்தில் 36அ என்னும் புதிய பிரிவினை உட்புகுத்துதல்.

"வர்த்தக, கைத்தொழில் முயற்சிகள் தொடர்பாக அமைச்சருக்குள்ள தத்துவங்கள்.

36அ. (1) அமைச்சர் 36 ஆம் பிரிவின் (ஐஐ) ஆம் பந்தியின்கீழான வர்த்தக அல்லது கைத்தொழில் முயற்சியினை—

(அ) அத்தகைய முயற்சியின் பொருளாதார வாய்ப்பு ;

(ஆ) அத்தகைய முயற்சியின் செயற்பாட்டால் ஏதேனும் நகரசபைக்கும் பொதுமக்களுக்கும் கிடைக்கக்கூடியவையான நலன்கள் ;

(இ) அத்தகைய முயற்சியில் ஈடுபடுகின்ற நகர சபையின் நிதிநிலைமை,

ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு அங்கீகரிக்கலாம்.

(2) பாராளுமன்றத்தினால் 158 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஏ) என்னும் பந்தியின்கீழ் நகர சபை ஒன்றுக்கு ஒதுக்கிவிடப்பட்ட பணத்தொகைகள் எவையும், அத்துடன் அமைச்சரினால் 158 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின்கீழ் நகர

சபை ஒன்றுக்கு குறித்தொதுக்கப்பட்ட கொடைகள் எவையும் ஏதேனும் வர்த்தக அல்லது கைத்தொழில் முயற்சியைத் தாபிக்கும் அல்லது பேணும் நோக்கங்களுக்காக அத்தகைய சபையால் பயன்படுத்தப்படுதலாகாது.

(3) அமைச்சர், ஏதேனும் நகர சபை ஏதேனும் வர்த்தக அல்லது கைத்தொழில் முயற்சியினைத் தொடர்ந்து நடாத்துவதானது, தவறான முகாமை காரணமாக அல்லது சபைக்கு நிதி இழப்பினை ஏற்படுத்தக்கூடும் என்ற காரணத்துக்காக அத்தகைய சபையின் நலன்களுக்குப் பங்கமேற்படுத்துவதாயமையும் எனக் கருதுமிடத்து, அவர், சபையுடன் கலந்தாலோசித்துக் கொண்டதன் பின்னர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அத்தகைய முயற்சி செயற்படுத்தப்படுவதனை முடிவுறுத்தலாம் என்பதுடன் அத்தகைய முயற்சியின் எல்லாப் புத்தகங்களையும் பதிவேடுகளையும் இருப்புக்களையும் பொறுப்பேற்குமாறு சபையினைப் பணிப்பதோடு அத்தகைய கட்டளைக்குப் பயன்தர அவசியமாகக் கூடியவாறான அத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் பணிக்கலாம்.

(4) அமைச்சர் அல்லது ஆணையாளர், காலத்திற்குக் காலம், ஏதேனும் வர்த்தக அல்லது கைத்தொழில் முயற்சியில் ஈடுபட்டுள்ள ஏதேனும் நகர சபைக்கு அதன் தொழிலைக் கொண்டுநடாத்துதல் அல்லது செய்தல் தொடர்பான பொதுவான அல்லது சிறப்பான பணிப்புகளை வழங்கலாம் என்பதுடன் அத்தகைய பணிப்புகள் சபையால் கொண்டுநடாத்தப்படுதலும் வேண்டும்.

(5) அமைச்சர் அல்லது ஆணையாளர், காலத்திற்குக் காலம், அத்தகைய முயற்சியின் தொழில் தொடர்பான விவரத்திரட்டுகள், கணக்குகள் அத்துடன் வேறும் தகவல் என்பவற்றை அவர் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் கொடுத்துதவுமாறு எழுத்தில் சபையினைப் பணிக்கலாம் என்பதுடன் சபையானது அத்தகைய பணிப்பு ஒவ்வொன்றினையும் கொண்டுநடாத்தலும் வேண்டும்.".

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்தச் சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ந் திகதிக்கு முன் எதிர் வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.